සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2557

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2013 (2014)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

## (02) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள்

## Social, Economic, Political background and trends in Sri Lanka

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

1 2 3 4

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

- ✳ இவ்வினாத்தாள் பகுதி **I** பகுதி **II** ஆகிய பகுதிகளையும் **6** பக்கங்களில் **40** வினாக்களையும் கொண்டது.
- ✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.
- ✳ பகுதி **I இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும்** பகுதி **II இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலம்** ஆகும்.
- ✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- ✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- ✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
- ✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- ✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.
- ✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

### பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 20 | |
| 4 | 21 - 31(i) | |
| 5 | 31(ii) - 34(ii) | |
| 6 | 34(iii) - 40 | |
| மொத்தம் | | |

இறுதிப்புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

[பக் 2 ஐப் பார்க்க.

(iii) தகவல் மற்றும் தொழினுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட உபாயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

35. இலங்கையைப் போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இடைநிலை மட்டம் அல்லது மூன்றாம் நிலை மட்டத்தை விட ஆரம்ப மட்டக் கல்வி அபிவிருத்திக்காகக் கூடுதலான நிதி முதலீடு செய்யப்பட வேண்டும் என யுனெஸ்கோவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) ஏனைய மட்டங்களைவிட ஆரம்ப மட்டக் கல்வி அபிவிருத்திக்காகக் கூடிய நிதியினைத் தொடர்ச்சியாக முதலீடு செய்வது இலங்கையைப் போன்ற நாடுகளுக்கு முக்கியமாவதற்குரிய **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(ii) ஆரம்ப மட்ட கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் முதலீட்டினால் பெற்றுக்கொள்ளக்கூடிய சமூக நன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

(iii) ஆரம்ப மட்ட கல்வி அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ........................................................................................................

(ஆ) ........................................................................................................

*( 06 × 5 = 30 புள்ளிகள்)*

## பகுதி II

- **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையை உமக்கு **வழங்கப்படும் விடைத்தாளில்** எழுதுக.

36. இலங்கையின் தற்போதைய பொருளாதார கட்டமைப்பில் ஊடகங்களினால் செய்யப்படுகின்ற மிகையான விளம்பர செயன்முறைகள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான தாக்கத்தைக் குறைப்பதற்காகக் கடைப்பிடிக்கக்கூடிய பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகள் **நான்கைப்** பரிசீலிக்குக. *( 08 புள்ளிகள்)*

37. மனித அபிவிருத்தி சுட்டி தொடர்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) மூலம் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையின்படி இலங்கை 187 நாடுகளில் 73 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையின் மனித அபிவிருத்தி சுட்டியினை மேலும் உயர்த்துவதற்காகச் செயற்படுத்தக்கூடிய உபாயங்கள் **நான்கை** மதிப்பிடுக. *( 08 புள்ளிகள்)*

38. பழமைவாய்ந்த கலாசாரம் ஒன்றினை உரிமையாகக் கொண்ட இலங்கையின் இளைய சந்ததியினர் தற்போது மேற்குலக கலாசாரத்தினது செல்வாக்கு காரணமாக கலாசார முரண்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த நிலையில் இருந்து நாட்டின் இளைய சந்ததியினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய தீர்வுகள் **நான்கைப்** பரிசீலனை செய்க. *( 08 புள்ளிகள்)*

39. இலங்கையின் தற்போதைய சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகத் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 1978 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரசியலமைப்பிற்கு பதிலாகப் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென சமூக மட்டத்திலான கருத்தொன்று ஏற்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக உருவாக்கப்பட வேண்டிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படக்கூடிய **நான்கு** யோசனைகளை காரணங்களுடன் முன் வைக்குக. *( 08 புள்ளிகள்)*

40. கடந்த சில தசாப்தங்களாகப் பொருளாதார உலகமயமாக்கல் நடவடிக்கைகள் நடைபெறும் மட்டத்திற்கு சமாந்தரமாக இந் நாட்டின் சமூக உலகமயமாக்கல்(Social Globalization) நடைபெறாமையே தற்போதைய இலங்கை முகங்கொடுக்கும் சில சமூக பிரச்சினைகளுக்குப் பிரதான காரணமாக உள்ளது. இந்த நிலைமையினை வெற்றிகரமாக முகங்கொடுக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினைப்** பரிசீலனை செய்க. *( 08 புள்ளிகள்)*

❊ ❊ ❊

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

(ii) 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பில் மக்களின் இறைமையை உறுதி செய்து கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள **இரு** ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(iii) இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கடந்த கால அனுபவங்களைக் கருத்திற்கொண்டு அவற்றை நடைமுறையில் அமுல்படுத்தும்போது முகங்கொடுக்க நேரிடும் **இரு** பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

32. 2012 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிலே இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது.

(i) 2012 ஆண்டை விட 2013 ஆம் ஆண்டிலே இலங்கையினது ஏற்றுமதி வருமானம் உயர்ந்தமைக்கான **இரு** பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(ii) 2012 ஆம் ஆண்டிலே இந்நாட்டினது ஏற்றுமதி வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(iii) இலங்கையினது ஏற்றுமதி வருமானத்தை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய **இரு** மாற்று வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

33. தற்போது இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை செலுத்தப்படுவதோடு இதுவரைக்கும் அதற்காகப் பாரியளவிலான நிதி செலவிடப்பட்டுள்ளது.

(i) உட்கட்டமைப்பு வசதிகளாக கருதப்படும் **இரு** புலங்களைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(ii) இந்நாட்டினது பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்க வெண்டுமெனக் கருதப்படுவதற்குரிய காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(iii) இந்நாட்டினது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும்போது முகங்கொடுக்க நேரிடும் நிதிப்பிரச்சனைகள் தவிர்ந்த வேறு **இரு** பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

34. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பமானது தற்போது இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில் உருவாக்கப் புலமாக அமைந்துள்ளது.

(i) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு செலாவணியை பாரிய அளவில் பெற்றுத்தரும் இலங்கையின் புத்தம் புதிய தொழில்புலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

(ii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யும் **இரு** முறைகளைக் குறிப்பிடுக.

(அ) ................................................................................................................

(ஆ) ................................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

## பகுதி I

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.

1. 1833 ஆம் ஆண்டிலே கோல்புறூக் சீர்திருத்த ஆலோசனை மூலம் அமைக்கப்பட்ட இலங்கை சிவில் சேவையை இல்லாதொழித்து அதற்காக தற்போதைய இலங்கை நிர்வாக சேவை அமைக்கப்பட்டது எந்த ஆண்டிலாகும்?
   (1) 1956 (2) 1960 (3) 1963 (4) 1972 (………)

2. இலங்கையின் **நான்கு** தேசிய மரபுரிமை அமைவிடங்களாக யுனெஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்டவை இவற்றுள் எவை?
   (1) சிகிரியா, ரன்கிரி தம்புலுவிகாரை, தலதாமாளிகை, காலிக்கோட்டை
   (2) சிகிரியா, மாத்தளை அலுவிகாரை, எம்பெக்க தேவாலயம், கதிர்காமம்
   (3) மாத்தளை அலுவிகாரை, சிங்கராஜவனம், காலிக்கோட்டை, கதிர்காமம்
   (4) ரன்கிரி தம்புலுவிகாரை, எம்பெக்க தேவாலயம், சிங்கராஜவனம், தலதா மாளிகை (………)

3. இலங்கையின் முதலாவது விவசாயக் குடியேற்றத் திட்டம் இவற்றுள் எது?
   (1) கல்ஓயா (2) மினிப்பே (3) மின்னேரியா (4) கிரிதலே (………)

4. 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்ப சனாதிபதி பதவியை வகித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு புதிய சனாதிபதி தெரிவிற்காகப் பூரணப்படுத்தியிருக்க வேண்டிய **மிகக்குறைந்த** பதவிக்காலம் எத்தனை வருடங்களாகும் ?
   (1) 3 (2) 4 (3) 5 (4) 6 (………)

5. அண்மையில் இலங்கையிலே முதலாவது பழங்களுக்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது பின்வரும் எந்தப் பிரதேசத்திலாகும்?
   (1) அம்பிலிப்பிட்டிய (2) மல்வானை (3) பிபிலை (4) ஹொரணை (………)

6. இந்நாட்டின் மொத்த மின் உற்பத்திக்காக நீர்மின் சக்தியை பெறுவதற்கான பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்குரிய காரணமாக கருதப்பட **முடியாதது** பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   (1) காலநிலை மாற்றம் காரணமாக நீர் தேக்கங்களுள் சேகரிக்கப்படும் நீரினது கொள்ளளவு குறைவடைதல்.
   (2) மாற்று எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் அளவு அதிகரித்துக் காணப்படல்.
   (3) நீர்மின் நிலையங்களும் நீர் தேங்கு பிரதேசங்களும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாமை.
   (4) காணப்படும் நீர்மின் சக்தி வளங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளல். (………)

7. 2013 ஆம் ஆண்டினது இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைக்கேற்ப இலங்கைக்கு அதிகளவில் வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்பட்ட **நான்கு** இறக்குமதிப் பொருள்வகைகளையும் இறங்குவரிசை ஒழுங்குமுறையில் காட்டுவது கீழுள்ளவற்றுள் எதுவாகும்?
   (1) எரிபொருள், பொறியும் கருவியும், புடைவைகள் மற்றும் அதற்கான துணைப்பொருட்கள், உணவும் குடிபானங்களும்.
   (2) எரிபொருள், உணவும் குடிபானங்களும், பொறியும் கருவியும், புடைவைகள் மற்றும் அதற்கான துணைப்பொருட்கள்
   (3) எரிபொருள், புடைவைகள் மற்றும் அதற்கான துணைப்பொருட்கள், உணவும் குடிபானங்களும். பொறியும் கருவியும்
   (4) எரிபொருள், உணவும் குடிபானங்களும், புடைவைகள் மற்றும் அதற்கான துணைப்பொருட்கள், பொறியும் கருவியும். (………)

8. நுகர்வோர் பொருட்கள் தொடர்பான முறைப்பாட்டை முன்வைக்க வேண்டிய இலங்கை ரெலிகொம்மினது உடனடித் தொலைபேசி அழைப்பு இவற்றுள் எதுவாகும்?
   (1) 1919 (2) 1929 (3) 1967 (4) 1977 (………)

9. சார்க் வலய நாடுகளின் பண அலகுகளில் இலங்கையின் ரூபாவிற்கு சார்பாக உயர் மாற்று வீதப் பெறுமதி பண அலகு காணப்படுவது இவற்றுள் எந்த நாட்டிலாகும்?
   (1) நேபாளம் (2) பூட்டான் (3) மாலைதீவு (4) இந்தியா (………)



EXAMMOOD.LK EXAMMOOD.LK

சுட்டெண் :.........................

10. பொதுவியாபாரம் தொடர்பான கமிட்டி (COPE) பற்றிய **தவறான** கூற்று இவற்றுள் எது?
(1) அரசு மற்றும் அரை அரச நிறுவனங்களின் வருடாந்த கணக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படும்.
(2) அரசு மற்றும் அரை அரச நிறுவனங்களில் நடைபெறுகின்ற மோசடி மற்றும் ஊழல் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கை செய்யப்படும்
(3) அரச கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது.
(4) பாராளுமன்ற கூட்டத் தொடர் நிறைவடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பதவிக் காலம் நிறைவடையும். (.........)

11. அடிப்படை கற்கை நெறி நிறுவனம் (Institute of Fundamental Studies) அமைந்துள்ள நகரம் எது?
(1) கொழும்பு (2) கண்டி (3) குருணாகல் (4) அனுராதபுரம் (.........)

12. தற்போதைய இலங்கையில் **மிகக்குறைந்த** மக்கட் தொகையைக் கொண்டுள்ள மாவட்டம் இவற்றுள் எது?
(1) கிளிநொச்சி (2) முல்லைத்தீவு (3) மன்னார் (4) வவுனியா (.........)

13. பின்வருவனவற்றுள் **தொடர்பற்றது** எது?
(1) ஆதர் சி. கிளார்க் - பொறியியல் துறை
(2) சேனக்க பிபிலை - தேசிய ஔடதங்கள் கொள்கை
(3) ஜெப்ரி பாவா - கட்டட நிர்மாணக்கலை
(4) என்.ஏ.எல் குலசிங்க - கொங்கிறீட் தொழினுட்பம் (.........)

14. இலங்கையின் கிரிக்கட் வரலாற்றிலே அதிக டெஸ்ட் சதத்தைப் பெற்றுக் கொண்டவர் இவர்களுள் யார்?
(1) அரவிந்த டி சில்வா (2) சனத் ஜயசூரிய
(3) மகேஹல ஜயவர்த்தன (4) குமார் சங்கக்கார (.........)

15. இலங்கையின் தொழில்சார் தொழினுட்ப டிப்ளோமாக்களையும் பட்டங்களையும் வழங்கும் பல்கலைக்கழகம் அமைந்திருப்பது எங்கே?
(1) பதுளை (2) பெலிஹுல் ஓயா (3) மொறட்டுவ (4) இரத்மலான (.........)

16. பிலிப்பைனிலிருந்து "மக்சயிசே" விருதினைப் பெற்றுக் கொண்ட இலங்கையர்கள் **மூவரையும்** சரியாகக் குறிப்பிடும் வரிசை கீழேயுள்ளவற்றுள் எது?
(1) எதிரிவீர சரத்சந்திர, பிரேமசிறி கேமதாச, வண. தொன் பீற்றர்பிள்ளை
(2) ஏ.டி. ஆரியரத்ன, டபிள்யூ. டி. அமரதேவ, வண. மர்சலின் ஜெயக்கொடி
(3) லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், ஆர்தர்.சி.கிளார்க், சந்திரா விக்கிரமசிங்க
(4) எல்.டீ.பீ. மஞ்சுசிறீ, சிறில் பொன்னம்பெருமா, குணபால மலலசேகர (.........)

17. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழே நிர்மாணிக்கப்பட்ட பிரதான நீர்த்தேக்கத்தை மட்டும் உள்ளடக்கிய தொகுதி இவற்றுள் எதுவாகும்?
(1) விக்டோரியா, கொத்மலை, ரன்தனிகலை, மாதுருஓயா, மொரக்கஹகந்த
(2) விக்டோரியா, கொத்மலை, லுணுகம்வெகர, மாதுருஓயா, மொரக்கஹகந்த
(3) விக்டோரியா, லக்ஸபான, ரன்தனிகலை, மாதுருஓயா, மொரக்கஹகந்த
(4) விக்டோரியா, ரன்தனிகலை, இங்கினிமிற்றி, மாதுருஓயா, மொரக்கஹகந்த (.........)

18. 2013 ஆம் ஆண்டிலே இலங்கைக்கு அதிகூடிய உல்லாசப் பயணிகள் எந்த நாட்டிலிருந்து வருகை தந்தார்கள்?
(1) ஐக்கிய இராச்சியம் (2) சீனா (3) இந்தியா (4) ஜேர்மன் (.........)

19. அண்மையில் இலங்கையிலே தொற்றும் நோய்களில் இருந்து தொற்றாத பயங்கர நோய்கள் வரை படிப்படியாக விரிவடைந்ததற்கு காரணம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) வயதுவந்தோரின் சனத்தொகை அதிகரித்தமை
(2) நகரமயமாக்கல் நிகழ்ந்தமை
(3) தனிப்பட்ட வாழ்க்கை கோலம் மாற்றமடைந்தமை
(4) சுகாதார பழக்கங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை (.........)

20. தனியார் மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களில் ஊழியர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்கும் குறிக்கோளுக்காக நிறுவப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதி சகலவற்றையும் நிர்வகிக்கும் அதிகாரம் பின்வருவோரில் யாருக்கு வழங்கப்பட்டிருப்பது?
(1) மத்திய வங்கியின் ஆளுநர் (2) தொழில் ஆணையாளர்
(3) பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் (4) ஓய்வூதியக் கொடுப்பனவு ஆணையாளர் நாயகம் (.........)

*( 01 × 20 = 20 புள்ளிகள்)*

[பக் 4 ஐப் பார்க்க.

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

2557

● **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையை** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

21. முழு இலங்கையினதும் மற்றும் ஒவ்வொரு மாகாணத்தினதும் செல்வந்த நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இணைச் சுட்டியாக 2008 ஆம் ஆண்டிலே 'இலங்கை செல்வந்த சுட்டி (Sri Lanka Prosperity Index)' எந்த நிறுவனத்தினால் அறிமுகஞ் செய்யப்பட்டது ?

.....................................................................................................................................

22. இலங்கையின் புதிய கண்டுபிடிப்புகளின் ஆணைக்குழு எந்த அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது?

.....................................................................................................................................

23. கிறீசில் அமைந்துள்ள பாதினோன் தேவாலயத்தின் மாதிரிக்கேற்ப எமது நாட்டில் அமையப் பெற்றுள்ள பிரபல்யமான கட்டிடம் எது?

.....................................................................................................................................

24. தற்போது இலங்கையின் பணவீக்க மட்டத்தினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டி யாது?

.....................................................................................................................................

25. இலங்கை சமுர்த்தி அதிகாரசபை இலங்கையின் தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கையின் மத்திய பிரதேச (உடரட்ட) அதிகாரசபை என்பன ஒன்றிணைக்கப்பட்டு அண்மையில் உருவாக்கப்பட்ட திணைக்களம் எது?

.....................................................................................................................................

26. இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய சட்டதிட்டத்திற்கேற்ப ஒவ்வொரு அனுமதி பெற்ற வர்த்தக வங்கியினாலும் பேணப்பட வேண்டிய **குறைந்த** மூலதன ஈட்ட விகிதம் (**Minimum** Capital Adequacy Ratio) எவ்வளவு?

.....................................................................................................................................

27. இலங்கைப் பிரஜைகளின் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளைப் பரிசீலிப்பதற்காக சட்டபூர்வமான அதிகாரத்தைக் கொண்டுள்ள இந்நாட்டினது நீதிமன்றம் யாது?

.....................................................................................................................................

28. 2014 ஆம் ஆண்டிலே கிளாஸ்கோவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை எந்த போட்டி நிகழ்ச்சியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது?

.....................................................................................................................................

29. இலங்கையிலே ஊழியர் ஆளணியின் பங்குபற்றும் விகிதத்தைக் கணக்கிடுவதற்காக தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நபர்களினது வயதுத் தொகுதி யாது?

.....................................................................................................................................

30. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இந்நாட்டினது முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் எந்த வருடத்தில் நடைபெற்றது?

.....................................................................................................................................

*( 01 × 10 = 10 புள்ளிகள்)*

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின்** மீது **சுருக்கமாக** எழுதுக.

31. 1978 ஆம் ஆண்டினது இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் மூலம் மக்களினது இறைமையை உறுதி செய்வதற்காக இதற்கு முன்னர் இருந்த அரசியலமைப்புகளை விடக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சிலர் கூறுகின்றனர்.

(i) இலங்கையைப் போன்ற சனநாயக நிர்வாக அமைப்பினைக் கொண்ட நாடொன்றினது இறைமை உறுதி செய்யப்படுதல் முக்கியமானது என்பதற்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ...........................................................................................................................

(ஆ) ...........................................................................................................................



EXAMMOOD.LK
EXAMMOOD.LK